**சுருக்கம்**

அலுவலக உதவியாளர் – மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்தில் உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான பணிநிலை பிரிவினர் எண்ணிக்கை நிர்ணயித்தல் மற்றும் காலிப்பணியிடங்களை நிரப்ப அனுமதியும் வழங்கல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (சி1) துறை**

**அரசாணை (நிலை) எண்.474** **நாள்:17.10.2019**
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, புரட்டாசி 30

படிக்க:

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.41111/தி(ம)வ2/3/2014, நாள் 25.11.2015, 08.12.2016, 18.07.2017 மற்றும் 14.07.2018.

-----------

**ஆணை**

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில் 37 அலுவலக உதவியாளர் மற்றும் 8 இல்ல உதவியாளர் என 45 அலுவலக உதவியாளர் பணியிட எண்ணிக்கையை கீழ்க்கண்டவாறு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்திற்கு நிர்ணயம் செய்யவும், மேலும் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசின் அனுமதியும் கோரியிருந்தார்:–

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப் பட்ட பதவியின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட அலுவலக உதவியாளர் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட இல்ல உதவியாளர் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட மொத்த அலுவலக உதவியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | இயக்குநர் | 1 | 2 | 1 | 3 |
| 2. | கூடுதல் இயக்குநர் | 5 | 5 | 5 | 10 |
| 3. | நிதி கட்டுப்பாட்டாளர் | 1 | 1 | 1 | 2 |
| 4. | கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) | 1 | 1 | 1 | 2 |
| 5. | இணை இயக்குநர் | 6 | 6 | – | 6 |
| 6. | துணை இயக்குநர் | 2 | 2 | – | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | முதன்மை கணக்கு அலுவலர் | 1 | 1 | – | 1 |
| 8. | உதவி இயக்குநர் (தணிக்கை) | 1 | 1 | – | – |
| 9. | நிர்வாக அலுவலர் | 4 | | | |
| 10. | கணக்கு அலுவலர் | 1 | | | |
| 11. | இளநிலை நிர்வாக அலுவலர் | 2 | | | |
| 12. | உதவி கணக்கு அலுவலர் | 1 | 18 | – | 18 |
| 13. | விளம்பர அலுவலர் | 1 | | | |
| 14. | புள்ளியியல் அலுவலர் | 1 | | | |
| 15. | துணை காவல் கண்காணிப்பாளர் | 1 | | | |
| 16. | அலுவலக கண்காணிப்பாளர் | 34 | | | |
| 17. | புள்ளியியல் உதவியாளர் | 4 | | | |
| 18. | உதவியாளர் | 106 | | | |
| 19. | இளநிலை உதவியாளர் | 9 | | | |
| 20. | தட்டச்சர் | 30 | | | |
| 21. | பதிவுரு எழுத்தர் | 16 | | | |
| | | 228 | 37 | 8 | 45 |

2. மேற்கண்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு உரிய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலனை செய்தது. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்தில் உள்ள 17 உயரதிகாரிகளுக்கு 17 அலுவலக உதவியாளர்களும், 211 ஊழியர்களுக்கு 12:1 என்ற விகிதத்தில் 17 அலுவலக உதவியாளர்களும், இயக்குநருக்காக 2 இல்ல அலுவலக உதவியாளர்களும் என மொத்தம் 36 (17+17+2) அலுலவக உதவியாளர் பணிநிலைப் பிரிவு எண்ணிக்கையை (Cadre Strength) நிர்ணயம் செய்யவும், மேற்கண்ட 36 பணியிடத்தில், 11 நபர்கள் ஏற்கனவே பணியில் இருப்பதால், 25 இடங்களை காலிப்பணி மதிப்பீட்டிற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளவும், மேற்படி காலிப் பணியிடங்களை நிரப்ப மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநருக்கு அனுமதியும் வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வரசாணை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை மற்றும் நிதித்துறையின் அ.சா.கு.எண்கள்.18203/எப்–2/2019, நாள் 03.06.2019 மற்றும் 25520/நிதி(பிசி)/2019, நாள் 25.06.2019–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பீலா ராஜேஷ்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–600 006.
மாநில கணக்காயர், சென்னை–600 018.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–600 015.
**நகல்**
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த(எப்)த் துறை, சென்னை – 600 009.
நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (தகவுப் பிரிவு)த் துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு /உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

18/10/19
**பிரிவு அலுவலர்.**
18/10/19